உதவும் வகையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் தெரிவித்துள்ளனர். தங்கள் தொகுதிக்கான கோரிக்கைகளையும் முன்வைத்திருக்கிறார்கள். அவை, உரிய அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உங்களது ஆலோசனைகளைக் கருத்தில்கொண்டு, உங்களின் நியாயமான கோரிக்கைகளை நமது அரசு உறுதியாக நிறைவேற்றித் தரும். எனவே, இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, தங்களது திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!" நன்றி! வணக்கம்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

4. 14–2–2024 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மேதகு ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்மீது பேசியபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சுமார் 254 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்று நான் சொன்னேன். அப்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இடையில், "நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்கூட அளிக்கப்படவில்லை" என்று தவறான ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். இங்கே G.O. இருக்கிறது.

(திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கையில் வைத்திருந்த தாளினை அவையில் காண்பித்தார்.)

அரசாணை எண் 467, நாள் 11–12–2017–ல் 12 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன மற்றும் 20–3–2018–ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 91–ல் 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம், 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலான, நான் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு அமைச்சராக இருப்பவர், அதிகாரம் இருப்பதன் காரணமாக தவறான குற்றச்சாட்டை இனி பதிவு செய்யக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு தவறாகப் பதிவு செய்திருப்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், அந்தப் பதிவு இன்றையதினத்தில் அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. அரசாணைகளின் நகல்கள் தற்போது என்னிடம் இருக்கின்றன. வேண்டுமென்றால் என்னிடமிருந்து கேட்டு வாங்கிக்கொள்ளட்டும்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கு சொன்னதை இன்றைக்கு மீண்டும் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முன்னர், முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த அந்த 4 ஆண்டுகளில், ஏதாவது ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு, அவர் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று இப்போது சொல்கிறார்கள். ஏற்கெனவே, நான் கூறியது என்னவென்றால், 2011 முதல் 2017 வரையிலான ஆண்டுகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வந்தன என்பதை நான் மறுக்கவில்லை. 2017–க்குப் பிறகு, அதாவது, அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு ஏதேனும் அரசாணை வரப்பெற்றதா என்றுதான் கேட்டேன். இப்போதும் அவர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டன என்றுதான் கூறியுள்ளார். திறக்கப்பட்டது சரி. ஆனால், அதற்கான அரசாணை எப்போது வந்தது என்பதுதான் முக்கியம். இது

2018–க்கு முன் வந்தது என்று நேற்றைக்கு அவரே சொன்னார். தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கின்ற காரணத்தால், 2018–க்குப் பிறகு, சுமார் முப்பதாயிரம் மக்கள்தொகைக் கொண்ட சமதளப் பகுதிகளிலும், இருபதாயிரம் மக்கள்தொகைக் கொண்ட மலைவாழ்ப் பகுதிகளிலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தருவதை ஒன்றிய அரசு நிறுத்திக் கொண்டது என்று அவரே நேற்று சொன்னார். இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, கடந்த ஆண்டு புதிதாக 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டிற்கு பெறப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் முதல்வராக இருந்த 4 ஆண்டுகளில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெறப்பட்டதற்கான அரசாணையைக் காட்டுங்கள் என்று நான் மீண்டும் இப்போதும் கேட்கிறேன். ஆனால், நீங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டதற்கான அரசாணையைக் காண்பிக்கிறீர்கள். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமல்லவா! (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். இதை வேண்டுமானால் நீங்கள் பாருங்கள். பார்த்தாவது தெரிந்துகொள்ளட்டும்.

(திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கையில் வைத்திருந்த தாளினை அவையில் காண்பித்தார்.)

இவற்றைப் பார்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளட்டும். இதில் G.O. No. 467. மீண்டும் மீண்டும் சொல்கிறேன். வேண்டுமென்றால் உங்களுக்குக் கொடுக்கிறேன். தயவுசெய்து இதைப் பார்த்துவிட்டுப் பேசுங்கள். 11–12–2017 அன்று யார் முதலமைச்சர் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள்தான் முதலமைச்சர்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அப்போது நான்தானே முதலமைச்சர். நான் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் இந்த அரசாணை வெளியிடப்பட்டது. 12 ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோன்று, G.O. No.91 வெளியிடப்பட்ட 20–3–2018 அன்று யார்

முதலமைச்சர் என்பதையும் சொல்லுங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்தான் முதலமைச்சர். (சிரிப்பு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நான் சொன்னால்தான், அவர் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார். நான் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 20–3–2018 அன்றுதான் இந்த அரசாணை வெளியிடப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் கொண்டுவரப்பட்டன. 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, நான் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டு, துவக்கப்பட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்யப்பட்டுவிட்டது. நன்றி. விவாதம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசட்டும்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு குற்றச்சாட்டை மறுத்திருக்கிறார். அந்த அரசாணையை இப்போது வாங்கிப் பார்ப்பதைவிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பதிவு செய்த குறிப்புகளைப் பார்த்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது உண்மையென்றால், அடுத்த நாள் சபை கூடும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதை நீக்கிவிடுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதுவரை பத்திரிகைகளில் செய்தி வெளிவராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பத்திரிகைகளில் வெளிவந்த பிறகு நீக்குவதில் என்ன பிரயோஜனம். இன்று எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. தங்களிடத்தில் இப்பொழுதே நான் கொடுக்கின்றேன். நீங்கள் இதைப் பரிசீலனை செய்யுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கண்டிப்பாக நீங்கள் கொடுக்கிற ஆவணங்களையும், அமைச்சர் கூறிய பதிலையும் பரிசீலனை செய்து அடுத்த கூட்டத்தில் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் முடிவு செய்கிறேன். நீங்கள் கூறியதும் பதிவாகியிருக்கிறது. அமைச்சர் கூறியதும் பதிவாகியிருக்கிறது. நான் இரண்டையும் ஆய்வு செய்து எது சரியோ, அதை அவைக்குச் சொல்லிவிட்டு, தேவையில்லாததை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதுவரையில் நான் சொன்னதையும் நிறுத்தி வையுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. நன்றி.

முற்பகல் 11–55

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்— விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இஸ்லாத்தை ஏற்கக்கூடிய, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிட மக்கள், சீர்மரபினர் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களாக வகைப்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி நேற்றையதினமும் நான் உரையாற்றினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே சமூக நீதிக்கு முதன்மையான முன்னுதாரணமான மாநிலமாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுடைய கோரிக்கையை ஏற்று, இது பரிசீலிக்கப்படும், நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்தமைக்காக சிறுபான்மையின மக்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.